# மாகாணக்கல்வித்திணைக்களம்

## வடமாகாணம்

## க.பொ.த (உ/தர) பயிற்சிப் பரீட்சை வினாத்தாள் - 2020

## பரதநாட்டியம் 1 (53T1)

**பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

1. தலையாலும் கண்களாலும் பாவத்தை வெளிப்படுத்தும் ஆங்கிகஅபிநயப்பிரிவு
   1.சூசிகாபிநயம் 2.பாவாபிநயம் 3.தொந்திகாபிநயம் 4.இலட்சணிகாபிநயம் 5.வாச்சிகாபிநயம்
2. தாளத்தின் செய்கை முறையினைப் பற்றிக் கூறும் பிராணன்
   1.கிரியை 2.மார்க்கம் 3.அங்கம் 4.களை 5.ஜாதி
3. தத்,தீங்கிணதொம்-தகதிகுததிங்கிணதொம் இதில் இடம்பெறும் ஜாதிகள்
   1.திஸ்ரம்,கண்டம் 2.மிஸ்ரம்,கண்டம் 3.மிஸ்ரம்,சதுஸ்ரம் 4.திஸ்ரம்,சங்கீரணம் 5.மிஸ்ரம்,சங்கீரணம்
4. கண்ணப்பநாயனார் சிவன் மேல் கொண்ட பக்தி
   1.லாவண்யபக்தி 2.மாதுரியபக்தி 3.மூர்க்கபக்தி 4.சாக்கியபக்தி 5.வாத்சல்யபக்தி
5. நாட்டியசாஸ்திரத்தில் தாளக்கருவிகள் பற்றி விளக்கப்பட்டுள்ள அத்தியாயம்
   1.14ஆவது 2.24ஆவது 3.27ஆவது 4.34ஆவது 5.36ஆவது
6. "ஸ்ரீகிருஸ்ண ஜலகிரீட" எனும் நடனநாடகம் இடம்பெற்றுள்ள சாஸ்திரியநடனம்
   1.குச்சுப்புடி 2.கதகளி 3.மணிப்புரி 4.கதக் 5.மோகினியாட்டம்
7. மோகினியாட்டம் கேரளகலாமண்டலத்தினூடாக மறுமலர்ச்சி பெற்ற ஆண்டு
   1.1920 2.1930 3.1935 4.1940 5.1945
8. மிஸ்ரஅலாரிப்பில் மொத்த த்ருகுடுதக செயற்பாட்டிற்குமான அட்சரஎண்ணிக்கை
   1.14 2.21 3.28 4.35 5.42
9. கௌத்துவத்தின் சாஹித்திய கர்த்தா
   1.கங்கமுத்துநட்டுவனார் 2.தஞ்சைபொன்னையா 3.பாபநாசம்சிவன்
   4.வீரமணிஐயர் 5.சாந்தினி சிவனேசன்
10. பூர்வமேளகர்த்தாக்கள் அடங்குகின்ற சக்கரம்
    1.ரிசி 2.பிரம்ம 3.ருத்ர 4.நேத்ர 5.ஆதித்ய
11. விவாதிஸ்வரங்கள் கொண்ட தொகுதி
    1.ஸ,ப 2.ரி,க 3.ம,த 4.ப,நி 5.நி,ஸ
12. "சங்கீதகாயகாம்ருதவர்ஷினி" எனும் நூலை எழுதியவர்
    1.கிருஸ்ணையர் 2.சபாரஞ்சிதம் 3.மீனாட்சிசுந்தரம்பிள்ளை
    4.அருணாசலநட்டுவனார் 5.சுப்பராயநட்டுவனார்
13. ஈ.கிருஸ்ணையர் கொழும்பில் நடைபெற்ற நடனவிழாவில் பங்குபற்றிய ஆண்டு
    1.1935 2.1945 3.1950 4.1960 5.1965
14. கலாஷேத்திராவின் முதலாவது மாணவி
    1.ருக்மணிதேவி 2.கௌரிஅம்மாள் 3.பாலசரஸ்வதி 4.ராதாஸ்ரீராம் 5.கமலா
15. கண்டியநடனத்திற்குரிய தாளவாத்தியம்
    1.மத்தளம் 2.கட்டபெரய 3.தவுளபெரய 4.ரபான் 5.உடுக்கு
16. தூரதேசம் சென்ற காதலனைப் பிரிந்திருக்கும் நாயகி
    1.விரஹோத்கண்டிதா 2.அபிசாரிகா 3.கலகாந்தரிதா 4.கண்டிதா 5.ப்ரோஷிதபர்த்ருகா
17. திருவாசகம் பாடியவர்
    1.சம்பந்தர் 2.அப்பர் 3.சுந்தரர் 4.மாணிக்கவாசகர் 5.அருணகிரிநாதர

.

18. பதவர்ணத்தின் பூர்வாங்கப்பகுதியில் அடங்குவன
1.பல்லவி,அனுபல்லவி 2.பல்லவி,அனுபல்லவி,சரணம் 3.பல்லவி,அனுபல்லவி,முக்தாயிஸ்வரம் 4.பல்லவி,முத்தாயிஸ்வரம்,சரணம் 5.சரணம்,சரணஸ்வரம்
19. முகஒப்பனைக்குப் பயன்படுத்தும் பொருள் அல்லாதது
1.பான்ஸ்ரிக்(panstick) 2.பான்கேக்(pancake) 3.பிங்பௌடர்(pinkpowder) 4.ஐடெக்ஸ்(eyetex) 5.சிவப்புமை(red ink)
20. மோகன இராகத்தில் பாடப்படும் உருப்படி
1.திருவாசகம் 2.அலாரிப்பு 3.பதவர்ணம் 4.புராணம் 5.சப்தம்
21. கண்ணீருடன் கூடிய சிரிப்பைக் காட்டும் ஹாஸ்யப்பிரிவு
1.ஹஸித்தம் 2.விஹஸித்தம் 3.உபஹஸித்தம் 4.அபஹஸித்தம் 5.அதிஹஸித்தம்
22. இரஸஉணர்வை அதிகரிக்கச்செய்யும் இயற்கைக்காரணிகளைக் கொண்ட பாவம்
1.ஆலம்பனவிபாவம் 2.உத்தீபனவிபாவம் 3.அனுபாவம் 4.வியபிசாரிபாவம் 5.சாத்வீகபாவம்
23. பயானகரஸத்தின் எதிர்ரஸம்
1.சிருங்காரம் 2.ரௌத்ரம் 3.வீரம் 4.அற்புதம் 5.பீபத்ஸம்
24. “தீங்குரவைக் கொளைத் தாங்குத்து”எனக் கூறும் புறநானூறுப் பாடலுக்குரிய நிலம்
1.குறிஞ்சி 2.முல்லை் 3.மருதம் 4.நெய்தல் 5.பாலை
25. நடனத்திற்கும்,நாடகத்திற்கும் ஏற்றதான :த்விபதம்,யக்ஷகானம்”போன்ற படைப்புக்கள் கொடிகட்டிப் பறந்த காலம்
1.நாயக்கர்காலம் 2.விஜயநகரகாலம் 3.ஆங்கிலேயர்காலம் 4.பல்லவர்காலம் 5.சோழர்காலம்
26. தேவதாசிகளை கோயிலுக்கு அர்ப்பணிக்கும்முறை சட்டபூர்வமாக ஒழிக்கப்பட்ட ஆண்டு
1.1910 2.1920 3.1930 4.1940 5.1947
27. சோடச உபசாரங்களில் நிருத்திய உபசாரம் சமர்ப்பிக்கப்படுவது
1.12ஆவது 2. 13ஆவது 3.14ஆவது 4. 15ஆவது் 5.16ஆவது
28. ஆதிதாளத்தில் 4 ஆவர்த்தனங்களுக்கு கோர்வை அமைக்கும் போது உள்ளடக்கப்பட வேண்டிய மாத்திரைகளின் எண்ணிக்கை
1.32 2.64 3.96 4.128 5.160
29. மோடிதம் எனும் பாதபேதம் இடம்பெறும் அடவு
1.கோர்வையடவு˙ 2.மண்டியடவு 3.பரவலடவு 4.வீசலடவு 5.தட்டிமெட்டடவு
30. நடராஜரின் தூக்கியதிருவடி போல் சுற்றுதல்
1.உத்புலுதபிரமரி 2.சக்ரபிரமரி 3.கருடபிரமரி 4.ஏகபாதபிரமரி 5.குஞ்சிதபிரமரி
31. ஊர்த்துவ தாண்டவம் குறித்த நிற்கும் தொழில்
1.படைத்தல் 2.காத்தல் 3.அழித்தல் 4.அருளல் 5.மறைத்தல்
32. விகிருதம் எனும் அரங்கின் வடிவம்
1.சதுரம் 2.செவ்வகம் 3.முக்கோணம் 4.வட்டம் 5.சாய்சதுரம்
33. மரணக்காட்சி ஒன்றினைச் சித்தரித்துக் காட்டுவதற்கு ஏற்ற ஒலியமைப்புக் குறியீடு
1.மணியோசை 2.மகுடிஓசை 3.ஆந்தைஅலறல் 4.வண்டிச்சத்தம் 5.தெம்மாங்குஇசை
34. தெய்வங்களிடமிருந்து நன்மை பெறும் நோக்குடன் ஆடப்படும் சப்பிரகமுவ நடனமரபு
1.முல்மாத்ரய 2.சிந்துமாத்ரய 3.பட்டுதல்மாத்ரய 4.யக்பதமாத்ரய 5.யாதினிமாத்ரய
35. கரைநாட்டுப்பிரதேச நடனமரபில் இடம்பெறும் சிந்துவண்ணங்கள்
1.12 2.24 3.32 4.40 5.46
36. மந்திரதந்திர விளையாட்டுக்களை குறிக்கும் கூத்து
1.மகிடிக்கூத்து 2.காமன்கூத்து 3.பறைமேளக்கூத்து 4.வடமோடிக்கூத்து 5.தென்மோடிக்கூத்து
37. தீயகுணப்பாத்திரங்களுக்குரிய ஒப்பனை
1.பச்சை 2.சிவப்புத்தாடி 3.கறுப்புத்தாடி 4.கரி 5.மினுக்கு
38. மெட்டுக்களைக் கொண்ட வாத்தியம்
1.வீணை 2.வயலின் 3.சித்தார் 4.நாதஸ்வரம் 5.ஆர்மோனியம்
39. நாயன்மார்காலம் எனச் சித்தரிக்கப்படும் காலப்பகுதி
1.சங்ககாலம் 2.சங்கமருவியகாலம் 3.பல்லவர்காலம் 4.சோழர்காலம் 5.நாயக்கர்காலம்
40. சமயத்திற்குத் தகுந்தபடி உருமாறிக்கொள்பவள்
1.தாஸி 2.சேடி 3.சகி 4.தூதி 5.இலிங்கினி

- 41 தொடக்கம் 45வரையான வினாக்களுக்கு பின்வரும்அட்டவணையைப் பயன்படுத்தி மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

| தாளம் | ஜாதி | கதி | அங்கஅடையாளம் | அட்சரஎண்ணிக்கை |
|---|---|---|---|---|
| துருவதாளம் | …A…… | கண்டம் | $1_{3}01_{3}1_{3}$ | 55 |
| ……B……… | சதுஸ்ரம் | சங்கீரணம் | $1_{4}1_{4}00$ | 108 |
| திரிபுடைதாளம் | கண்டம் | ……C… | $1_{5}00$ | 63 |
| ரூபகதாளம் | மிஸ்ரம் | சதுஸ்ரம் | ……D……… | 36 |
| மட்டியதாளம் | சங்கீரணம் | திஸ்ரம் | $1_{9}01_{9}$ | ……E……. |

41. A இல் இடம்பெறவேண்டிய ஜாதி
    1.திஸ்ரம் 2சதுஸ்ரம் 3கண்டம் 4.மிஸ்ரம் 5.சங்கீரணம்
42. B இல் இடம்பெறவேண்டிய தாளம்
    1.ஏகதாளம் 2.ஜம்பைதாளம் 3.ரூபகதாளம் 4.மட்டியதாளம் 5.அடதாளம்
43. C இல் இடம்பெறவேண்டிய கதி
    1.திஸ்ரம் 2சதுஸ்ரம் 3கண்டம் 4.மிஸ்ரம் 5.சங்கீரணம்
44. D இல் இடம்பெறவேண்டிய அங்கஅடையாளம்
    1. $1_{5}01_{5}$ 2. $01_{7}$ 3. $1_{3}001_{3}$ 4. $1_{7}1_{7}0$ 5. $1_{4}1_{4}00$
45. A இல் இடம்பெறவேண்டிய அட்சரஎண்ணிக்கை
    1.40 2.45 3.50 4.60 5.81



46. இப்படத்தில் காணப்படும் நாட்டியக்கலைஞர் ………………….ஆவார்.
    1.ஸ்ரீமதி ருக்மணிஅருண்டேல்
    2.ஸ்ரீமதி பாலசரஸ்வதி
    3.ஸ்ரீமதி கௌரிஅம்மாள்
    4.ஸ்ரீமதி லீலாம்பிகை செல்வராஜா
    5.ஸ்ரீமதி பத்மா சுப்ரமணியம்



47. இப்படத்தில் இசைக்கப்படும் வாத்தியக்கருவி ………………….ஆகும்.
    1. பறை
    2. ரபான்
    3. மத்தளம்
    4. தப்பு
    5. நையாண்டிமேளம்




48. இப்படத்தில் ஆடப்படும் சாஸ்திரியநடனம் ………………….ஆகும்.
    1. மணிப்புரி
    2. கதக்
    3. குச்சுப்புடி
    4. ஒடிசி
    5. மோகியாட்டம்



49. இப்படத்தில் காணப்படும் சாஸ்திரியநடனம் ஆடப்படும் பிரதேசம்………ஆகும்.
    1. கேரளா
    2. ஆந்திரா
    3. வங்காளம்
    4. தஞ்சாவூர்
    5. கண்டி



50. இப்படத்தில் ஆடப்படும் கிராமியநடனம் ………………….ஆகும்.
    1. கோலாட்டம்
    2. தப்பாட்டம்
    3. ஒயிலாட்டம்
    4. சிலம்பாட்டம்
    5. பொம்மலாட்டம்

**மாகாணக்கல்வித்திணைக்களம்**

**வடமாகாணம்**

**க.பொ.த (உ/தர) பயிற்சிப் பரீட்சை வினாத்தாள் - 2020**

**பரதநாட்டியம் 11 (53T11)**

பகுதி 1 இல் **முதலாம் வினா** உட்பட **இரண்டு** வினாக்களையும் பகுதி 11 இல் எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**பகுதி1**

**1.**

1) பதவர்ணத்தின் இலட்சணத்தை எழுதுக. (03புள்ளிகள்)
2) நீர் கற்ற பதவர்ணத்தின் இராகம், தாளம், இயற்றியவர் பெயர், நடனஅமைப்பாளர், பாடலுக்குரிய கடவுள் ஆகியவற்றைக் குறிப்பிடுக. (05புள்ளிகள்)
3) நீர் கற்ற பதவர்ணத்தின் இரண்டாவது தீர்மானத்தின் சொற்கட்டினைத் தாள அங்கக் குறியீடுகளுடன் எழுதுக. (06புள்ளிகள்)
4) இதில் வரும் முத்தாயிஸ்வரக் கோர்வையின் சொற்கட்டினையும் அதன் பாடல் வரிகளையும் தாள அங்கக் குறியீடுகளுடன் எழுதுக. (06புள்ளிகள்)

**2.**

1) மணிப்புரி நடனத்தின் தோற்றம் பற்றி சுருக்கமாகத் தருக. (02புள்ளிகள்)
2) இந்நடனத்தில் பிரபல்யமான கலைஞர்கள் இருவரின் பெயர்களைத்தருக. (02புள்ளிகள்)
3) இந்நடனத்திற்குரிய ஆடைஅணிகள் எவை? (03புள்ளிகள்)
4) இந்நடனத்திற்குரிய இசை,பக்கவாத்தியம் என்பவற்றைத் தருக. (03புள்ளிகள்)
5) மணிப்புரி நடனத்தின் ஆடல்முறைகள் பற்றி விபரிக்குக. (05புள்ளிகள்)
6) மனிப்புரி நடனத்தின் வளர்ச்சி பற்றி ஆராய்க. (05புள்ளிகள்)

**3.**

1) அபிநயம் என்றால் என்ன? (02புள்ளிகள்)
2) அபிநயத்தின் வகைகள் எவை? (02புள்ளிகள்)
3) அவற்றை ஒவ்வொன்றினதும் உட்பிரிவுகளுடன் விளக்குக. (4x4=16புள்ளிகள்)

## பகுதி 2

**4.**

1) சிவனின் சப்த தாண்டவங்களையும் அவற்றின் தொழில்களையும் குறிப்பிடுக. (07புள்ளிகள்)
2) நடராஜதிருவுருவத்தின் ஒவ்வொரு அங்கங்களும் குறிக்கும் தத்துவத்தினைக் கருத்துக்களை விளக்குக. (13புள்ளிகள்)

**5.**

1) கலைகளின் பொற்காலமாக விளங்கும் சோழர்காலப்பகுதியைக் குறிப்பிடுக. (01புள்ளி)
2) இக்காலத்தில் ஆடப்பட்ட கூத்துக்கள் பற்றி விளக்குக. (02புள்ளிகள்)
3) இக்காலத்தில் எழுதப்பட்ட புதிய கலையிலக்கண நூல்கள் இரண்டு தருக. (02புள்ளிகள்)
4) சோழர்கால ஆடற்கலைஞர்கள் பற்றி விளக்குக. (05புள்ளிகள்)
5) சோழர்கால ஆடற்கலை அரங்குகள் பற்றி விளக்குக. (05புள்ளிகள்)
6) சோழர்காலக் கலை வளர்ச்சியை பிரதிபலிக்கும் கல்வெட்டுக்கள், ஆதாரங்களை விளக்கி எழுதுக. (05புள்ளிகள்)

**6.** பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

1) அஷ்டவிதநாயகிகள்
2) மத்தளம்
3) வசந்தன்கூத்து
4) சப்ரகமுவநடனம் (4x5=20புள்ளிகள்)

**7.** அபிநயஅரசி பாலசரஸ்வதியின் வாழ்க்கை வரலாற்றினையும் அவர் கலைத்துறைக்கு ஆற்றிய பணிகளையும் விபரிக்குக. (20புள்ளிகள்)

**8.** “இலங்கையில் பரதக்கலை வளர்ச்சியில் பல அரசசார்பான நிறுவனங்கள் பெரும்பங்காற்றிவருகின்றன.” இக்கூற்றினை நீர் கற்ற விடயங்களினூடாக ஆராய்க. (20புள்ளிகள்)